அனுப்புநர்
திரு. க. மூக்கையா, பி.இ.,
நகர் ஊரமைப்புதுணைஇயக்குநர்(பொ),
சேலம் மண்டலம்,
6, சன்னதிதெரு, சுப்ரமணியநகர்,
சூரமங்கலம், சேலம் – 636 005.
Telephone No :0427-2448625,
email: ddslmregion @gmail.com

பெறுநர்
தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
அந்தியூர் ஊராட்சி ஒன்றியம்,
சின்னதம்பிபாளையம் ஊராட்சி,
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

ந.க.எண். 5171/2017 சேம–3, நாள். 15 .03.2018.

ஐயா,

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மண்டலம் – ஈரோடு மாவட்டம் – அந்தியூர் வட்டம் – சின்னதம்பிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் – ச.எண். 1089/1, 1092/5, 1783/24, 1784 Part–ல் அமையும் - 0.93 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள "ஸ்ரீசாய்ராம் நகர்" அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் – (In Principle Approval of Layout Framework) வழங்குதல்– தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை [UD4(3)], நாள். 04.05.2017.
2. அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை [UD4(3)], நாள். 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/எல்ஏ2, நாள். 30.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. மனுதாரர் திரு. S.சேகர் அவர்களின் Online விண்ணப்பம் எண்.DTCP/ L/0014212/2017 நாள். 04.10.2017.

--------

மேற்காண் பொருள் தொடர்பாக, பார்வை 4–ல் கண்ட தங்கள் கடிதத்துடன் பெறப்பட்ட ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், சின்னதம்பிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண். 1089/1, 1092/5, 1783/24, 1784 Part–ல் அமையும் -0.93 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள "ஸ்ரீசாய்ராம் நகர்" அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கான கொள்கை அளவிலான ஒப்புதல் (In Principle approval for the Layout framework) அளிக்கப்பட்டு மூன்று தொகுப்பு செயலாணை கடிதம் மற்றும் கொள்கை அளவு ஒப்புதல் வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. பார்வை 1 மற்றும் 2–ல் கண்ட அரசாணைகளில் தெரிவித்தவாறு உரிய நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
சேலம் மண்டலம், சேலம்.

இணைப்பு
மூன்று தொகுப்பு செயலாணை கடிதம் மற்றும்
கொள்கை அளவு ஒப்புதல் வரைபடம்.

17

நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர்(பொறுப்பு), சேலம் மண்டலம், சேலம் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திரு. க. மூக்கையா, பி.இ.

ந.க.எண். 5171/2017 சேம–3

நாள்.15.03.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் – நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் – சேலம் மண்டலம் – ஈரோடு மாவட்டம் – அந்தியூர் வட்டம் – சின்னதம்பிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் – ச.எண். 1089/1, 1092/5, 1783/24, 1784 Part–ல் அமையும் 0.93 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள "ஸ்ரீசாய்ராம் நகர்" அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் – (In Principle Approval of Layout Framework) வழங்குதல்– தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண். 78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை [UD4(3)], நாள். 04.05.2017.
2. அரசாணை எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை [UD4(3)], நாள். 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை–2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/எல்ஏ2, நாள். 30.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. மனுதாரர் திரு. S.சேகர் அவர்களின் Online விண்ணப்பம் எண்.DTCP/ L/0014212/2017 நாள். 04.10.2017.

-------

ஆணை:

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய அரசாணை வாயிலாக 20.10.2016–க்கு முன் அமைக்கப்பட்ட அனைத்து அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் மனைகளை வரன்முறைப்படுத்தி ஒப்புதல் அளிக்க தமிழக அரசு அரசாணை பிறப்பித்துள்ளது. அரசாணையில் குறிப்பிட்டுள்ளவாறு பார்வை 4–ல் சுட்டிய கடிதம் வாயிலாக வரன்முறைப்படுத்துவதற்காக அனுமதியற்ற மனைப்பிரிவு விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளது.

அரசாணையை அமல்படுத்தும் ஒரு பகுதியாக, மனுதாரர்கள் பார்வை 4–ல் கண்ட கடிதம் மூலம் விண்ணப்பம் சமர்ப்பித்ததினை பரிசீலித்து, சேலம் மண்டலம், ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், சின்னதம்பிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம், ச.எண். 1089/1, 1092/5, 1783/24, 1784 Part–ல் அமையும் 0.93 ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள "ஸ்ரீசாய்ராம் நகர்" குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ம.வ./ம(சே) எண்.204/2018, வரன்முறை மனைப்பிரிவு எண்.165/2018 என எண்ணிடப்பட்டு அரசாணை விதி எண்.5–ன்படி கொள்கை அளவிலான ஒப்புதல் (In Principle Approval of Layout Framework) அளிக்கப்படுகிறது.

இந்த மனைப்பிரிவில் மனைப்பிரிவு உரிமையாளர் வரன்முறைப்படுத்தக் கோரியுள்ள மனைகள் அனைத்தும் 20.10.2016–ற்கு முன் Settlement Memo–படி பிரிக்கப்பட்டு 07 மனைகளுக்கும் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதால், 29 மனைகளுக்கு உரிய வளர்ச்சிக் கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் பெற்றுக் கொண்டு மனைகளை வரன்முறைப்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. கூராய்வுக் கட்டணம் Online மூலம் செலுத்தப்பட்டுள்ளது.

I.மனைப்பிரிவு வரன்முறைக் கட்டணங்கள் குறித்த மதிப்பீட்டுவிபரம்.

அ. கூராய்வுக் கட்டணம்

பார்வை 1–ல் கண்ட அரசாணை விதி எண்.12–ன் படி, மனைப்பிரிவுஅபிவிருத்தியாளர் அல்லது மனை உரிமையாளர் இணையதளத்தின் மூலம் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூ.500/– அனைத்து மனைகளுக்கும் செலுத்தப்பட்டதனை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அலுவலர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

ஆ. வரன்முறைக் கட்டணம்

பார்வை 1–ல் கண்ட அரசாணைவிதி எண்.9(1)(iii)–ன்படி சதுரமீட்டருக்கு ரூ.30/– என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து தொகையினை அரசால் அறிவிக்கப்பட்ட கீழ்க்கண்ட அரசுக் கணக்கில் செலுத்துவதை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அலுவலர் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும் (உதாரணமாக, 243.95 ச.மீ. பரப்பளவுள்ள மனை எண்.5–ற்கான வரன்முறைக் கட்டணம் 244 x 30 = ரூ. 7,320/–≅ (ரூபாய் ஏழாயிரத்து முன்னூற்று இருபது மட்டும் ஆகும்).

வரன்முறைக் கட்டணகணக்குத் தலைப்பு

0217 - Urban Development
60 - Other Urban Development Schemes
800 - Other Receipts
AT - Receipt under Regularization Charges of Unapproved Layout and Plots-DTCP
(D.P.Code: 0217-60-800-AT-0007)

இ. வளர்ச்சிக் கட்டணம்

பார்வை 2–ல் கண்ட அரசாணை விதி எண்.10(d)–ன் படி சதுர மீட்டருக்கு ரூ.25/– என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து தொகையினை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அலுவலர் அவர்கள் தனியாக கணக்கு தொடங்கி அக்கணக்கில் செலுத்தப்பட்டதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். (உதாரணமாக, 243.95 ச.மீ. பரப்பளவுள்ள மனை எண்.5–ற்கான வளர்ச்சிக் கட்டணம் 244 x 25 = ரூ. 6,100/– (ரூபாய் ஆறாயிரத்து நூறு மட்டும் ஆகும்).

II. பூங்கா/திறவிடம் (O.S.R.) கணக்கீட்டு விபரம்:

| | |
|---|---|
| அ. மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு | : 0.93 ஏக்கர் (அ) 40510.80 ச.அடி. |
| ஆ. உள்ளாட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட பூங்கா பரப்பு | : -- |
| இ. மனைப்பிரிவின் மொத்தமனைகள் | : 29 |
| ஈ. கிரையம் செய்யப்பட்ட மனைகள் | : 07 |
| உ. சாலைகளின் பரப்பளவு | : 8115.34 சதுரஅடி. |
| ஊ. விற்பனை செய்யப்பட்ட மனைகளின் பரப்பளவு | : 7063.00 சதுரஅடி. |

எ. விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவு : 25332.46 சதுரஅடி.

| | |
|---|---|
| ஏ. அரசாணைஎண்கள்: 78 மற்றும் 172 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்.04.05.2017 மற்றும் 13.10.2017 இவைகளின்படி ஒதுக்கப்படவேண்டிய பூங்கா பரப்பளவு | விற்பனைசெய்யப்படாத மனைகளின் பரப்புx (10/100) 23582.46 x (10/100) = 2533.24 ச.மீ 2533 ச.அடி. |

ஐ. ஒதுக்கப்பட்ட பூங்கா/பொது உபயோக பரப்பு :

மனை எண். 8, 22 பூங்காவிற்காக ஒதுக்கீடு = 2938 ச.அடி செய்யப்பட்டுள்ளது.

**III. நிபந்தனைகள்:**

1. உள்ளாட்சிகளின் சட்டம் மற்றும் அரசாணைகளின்படியும் நிலையில் உள்ள வழிகாட்டுதலின்படியும் மனைப்பிரிவு சாலைகள் மற்றும் பூங்கா/திறவிடத்திற்காக ஒதுக்கப்பட்ட நிலம் (பொது உபயோகம்) இவைகளை தன்னிச்சையாக உள்ளாட்சியின் உரிமை மற்றும் பராமரிப்பிற்கு எடுத்துக் கொண்டு விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும்.

2. இந்த கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின், சாலைகள்மற்றும் திறவிட ஒதுக்கீடுக்கான நிலங்களை உள்ளாட்சி பெற்றுக் கொண்டதற்கான அல்லது உள்ளாட்சி வசம் எடுத்துக் கொண்டதற்கான பத்திரம் மற்றும் ஆவணங்களை வருவாய்துறை ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பப்படவேண்டும்.

3. இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

4. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.

5. பார்வை 1–ல் காணும் அரசாணையின் விதி எண். 16–ன் படி சம்மந்தப்பட்ட உள்ளாட்சி தனியாக ஒரு கணக்கு தொடங்கி இந்த மனைப்பிரிவு வரன்முறைத் திட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படும் வளர்ச்சிக் கட்டணங்களை அதில் செலுத்தி, பராமரித்து வர வேண்டும்.

6. பார்வை 1–ல் காணும் அரசாணையின் விதி எண். 4–ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் எவையும் இந்த மனைப்பிரிவுக்குப் பொருந்தாது அல்லது கட்டுப்பாடுகளின் கீழ் வராது என்பதனை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

7. கூராய்வுக் கட்டணம், வரன்முறைக் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இவைகள் மனுதாரரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது என்பதனை உறுதி செய்த பின்னர் தனி மனைகளை உள்ளாட்சி வரன்முறை செய்து கொடுக்க வேண்டும். அரசாணையில் குறிப்பிட்டுள்ள கட்டணங்களை தவிர வேறு எந்த கட்டணங்களும் வசூலிக்கப்பட கூடாது. தனி மனைகளை வரன்முறைப்படுத்தப்பட்ட விபரம் நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர், சேலம் மண்டலம் அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ),
சேலம் மண்டலம், சேலம்.

**இணைப்பு**

மனைப்பிரிவு வரைபடம்.

15.7.18

**பெறுநர்**

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்,
அந்தியூர் ஊராட்சி ஒன்றியம்,
சின்னதம்பிபாளையம் ஊராட்சி,
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

**நகல்**

1. Thiru. S.Sekar,
240, MGR Nagar, Aavaran kadu,
Pallipalayam,
Tiruchengode Taluk,
Namakkal – 638 006.

2. சார்பதிவாளர்,
அந்தியூர் சார்பதிவாளர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

3. உதவி இயக்குநர் (நில அளவை)
ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
ஈரோடு மாவட்டம்.

4. வட்டாட்சியர்,
அந்தியூர் வட்டம்,
ஈரோடு மாவட்டம்.

(2–4:) சாலை மற்றும் பூங்காவிற்கான நில உரிமையினை உள்ளாட்சியின் பெயருக்கு மாற்ற உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளபடுகிறது.

21

Plot No. 1 appr. alc

## வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.), அந்தியூர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர் : திருமதி.நா.செல்வி.,

ந.க.எண் : 2971/2019/ஆ2 நாள் : 30.06.2020.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் - ஈரோடு மாவட்டம் அந்தியூர் வட்டாரம் - சின்னத்தம்பிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் -ரீ.ச.எண்கள் : 1089/1, 1092/5, 1783/24 மற்றும் 1784-ல் அமைந்துள்ள வீட்டு மனைகள் அங்கீகாரம் செய்தல் - மனைப்பிரிவுகள் முறைப்படுத்துதல் - அங்கீகாரம் வழங்கி உத்தரவிடல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (நவ4(3)) துறை, நாள் : 04.05.2017.
2. அரசாணை (நிலை) எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் (UD4(3)) துறை, நாள் : 13.10.2017.
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை – 2 அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண் : 13193/2017/எல்எ2, நாள் : 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. திரு.எஸ்.சேகர் அவர்களின் இணையதள விண்ணப்பம் எண் : DTCP/L/0014212/2017, நாள் : 4.10.2017
5. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம், சேலம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் : 5171/2017/ சேம-3, நாள் : 15.03.2018.
6. இவ்வலுவலக ந.க.எண் : 1/2018 நாள்:29.05.2018.
7. இவ்வலுவலக ந.க.எண் : 2/2018 நாள்:13.11.2018

ஆணை : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பள்ளிபாளையம், ஆவாரங்காடு, எம்.ஜி.ஆர்.நகர், கதவு எண் : 240 என்ற முகவரியில் வசிக்கும் திரு.சித்தன் மகன் திரு.எஸ்.சேகர் என்பவரால் ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அந்தியூர் ஊராட்சி ஒன்றியம், சின்னத்தம்பிபாளையம் ஊராட்சி மற்றும் கிராமம் ச.எண்கள் : 1089/1, 1092/5, 1783/24 மற்றும் 1784 (0.93 ஏக்கர்) பரப்பளவு நிலத்தில் வீட்டு மனைகள் ஏற்படுத்தி முறையான அங்கீகாரம் இல்லாமல் வீட்டு மனைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. பார்வை 1 மற்றும் 2ல் காணும் அரசாணைகளில் அங்கீகாரமில்லாத வீட்டு மனைகளை வரன்முறைப்படுத்திக் கொள்ள வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை 4ல் காணும் ஆன் லைன் விண்ணப்பம் வாயிலாக மேற்படியார் 29 வீட்டு மனைகளுக்கு அங்கீகாரம் வழங்கிட கோரி சேலம், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார்.

2) திரு.எஸ்.சேகர் என்பவரது ஆன் லைன் விண்ணப்பம் ஏற்கப்பட்டு பார்வை 5ல் காணும் கடிதம் மூலம் சேலம், நகர் ஊரமைப்புத் துணை இயக்குநர் அவர்களால் ஒரு சில நிபந்தனைகளின்படி, அனுமதியற்ற மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தி, ம.வ./ம(சே) எண்.204/2018, வரன்முறை மனைப்பிரிவு எண்.165/2018 என எண்ணிடப்பட்டு, "கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல்" (In Principle Approval of Layout Framework) வழங்கப்பட்டுள்ளது.

3) விற்பனை செய்யப்படாத 22 மனையிடங்கள் பின் இணைப்பு "அ"வில் உள்ள பட்டியலில் காணும் விபரப்படியும், விற்பனை செய்யப்பட்ட 7 மனையிடங்களுக்கு இணைப்பு "ஆ"வில் உள்ள பட்டியலில் காணும் விபரப்படியும் முறைப்படுத்துதல் கட்டணம் ஒரு சதுர மீட்டருக்கு ரூ.45/- என்ற விகிதத்திலும், வளர்ச்சிக் கட்டணம் ரூ.25/- என்ற விகிதத்திலும் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படாத 29 வீட்டு மனைகளுக்குரிய முறைப்படுத்துதல் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் செலுத்திடுமாறு பார்வை 6ல் காணும் கடிதம் வாயிலாக மனுதாரருக்குத் தெரிவிக்கப்பட்டது.

4) இணைப்பு "அ"ல் காணும் பட்டியலில் உள்ள விற்பனை செய்யப்படாத 22 வீட்டு மனைப்பிரிவுகளில் மனை எண் 8,22 பூங்கா, தான செலட்டில்மெண்ட் செய்தது போக மீதமுள்ள 20 மனைகளில் மனை எண்.18,20,21 க்கு ஏற்கனவே வரன்முறை படுத்தப்பட்டுள்ளது. வீட்டு மனைஎண் 1- க்கு வரன்முறைக் கட்டணம் ரூ.3,960/- (ரூபாய் மூன்றாயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) அந்தியூர், கனரா வங்கி செலுத்து சீட்டு எண் : 46 படியும் நாள் : 25.6.2020-ன்படியும், வளர்ச்சிக் கட்டணம் ரூ.2,200/- (ரூபாய் இரண்டாயிரத்து இருநூறு மட்டும்)-ஐ ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் ஈரோடு டவுன் கிளை, பாரத மாநில வங்கி கணக்கு எண் : 37303979395ல் 25.6.2020 அன்று பணப்பரிமாற்றம் மூலம் அந்தியூர் கிளையில் RTGS மூலம் செலுத்தியும் செலுத்துச் சீட்டுகளை ஒப்படைத்துள்ளார். எனவே, விற்பனை செய்யப்படாத 20 மனைகளில் 18 மனைகளுக்கு ரூ.500/- வீதம் ரூ.9000/- கூராய்வுக் கட்டணம் செலுத்தியுள்ளார். இந்தியன் வங்கி சலான் எண்:---- நாள்:30.6.2020. சின்னத்தம்பிபாளையம் ஊராட்சி ரீ.ச.எண்கள்:1089/1,1092/5,1783/24 மற்றும் 1784-ல் வீட்டு மனையிடங்களாகப் பிரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படாத மனையிடங்கள் பின்வருமாறு :-

| வ. எண் | மனைப் பிரிவு எண் | மொத்த மனையிடங்கள் |
|---|---|---|
| 1 | 1 | 1 மனையிடம் |
| | மொத்தம் | 1 மனையிடம் |

எனவே, பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு விற்பனை செய்யப்படாத 1 (மனைப்பிரிவு எண்:1) மனையிடம் இறுதி வரன்முறை செய்து இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது.

நிபந்தனைகள் :

1. சேலம் மண்டலம், நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண் : 5171/2017 சேம-3, நாள் :15.03.2018-ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளையும் தவறாது கடைப்பிடிக்க வேண்டும்.
2. திறந்த வெளி இடத்திற்கு (OSR) ஒதுக்கீடு செய்த சதுர அடிகள் பரப்பளவுள்ள நிலத்தினை தான பத்திரம் மூலம் மனைப்பிரிவு அங்கீகார உத்தரவு நாளிலிருந்து 10 (பத்து) நாட்களுக்குள் பத்திர பதிவு செய்து ஒப்படைக்க வேண்டும்.
3. வீட்டுமனைப் பிரிவுகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள சாலைகளில் தற்போதுள்ள நிலையிலேயே இருக்க வேண்டும். எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தக் கூடாது.
4. மனைப்பிரிவு வரைபடத்தில் பிரிக்கப்பட்டுள்ள மனை நில அளவுகளின் விபரங்களை இவ்வலுவலக அனுமதியின்றி மாற்றி அமைத்தல் கூடாது.
5. வரன்முறை செய்து வழங்கப்படும் மனைப்பிரிவுகளில் வீடுகள் மட்டும் கட்டுவதற்கு பயன்படுத்த வேண்டும். அபாயகரமானதும் மற்றும் அருவருக்கத்தக்கதுமான தொழிற்சாலைகள் ஏதும் ஏற்படுத்திட அனுமதி இல்லை.
6. மனுதாரர் செலுத்தியுள்ள கட்டண விகிதங்களில் வேறுபாடுகள் ஏதேனுமிருந்து கட்டணம் செலுத்த வேண்டி இருப்பின் அதனை மனுதாரர் செலுத்த வேண்டும்.
7. ஒவ்வொரு மனைப்பிரிவு பத்திர பதிவிற்கும் மனைப்பிரிவு அங்கீகார வரைபட நகலினை இணைத்து பத்திர பதிவு செய்திடல் வேண்டும்.
8. அரசின் கொள்கை அளவிலான மனைப்பிரிவு அங்கீகாரத்தில் அரசு மாற்றங்கள் ஏதேனும் செய்து உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டால் அந்த உத்தரவுகளுக்கு மனுதாரர் கட்டுப்பட்டவராவார்.
9. பத்திர பதிவுகள் மற்றும் நில உடைமை மாற்றங்களில் ஏற்படுத்தப்படும் சிவில் வழக்குகளுக்கு மனுதாரரே முழுப் பொறுப்பாவார்.
10. திறந்த வெளி இடத்திற்கான ஒதுக்கப்பட்ட நிலத்தின் வழியாக மனுதாரரால் விற்பனை செய்யப்படவுள்ள மனை நிலங்களுக்காக உயர் அழுத்த / குறைந்த மின் அழுத்த மின்சார லைன்கள் அமைத்து மின்சார வசதிகள் செய்து கொள்ள அனுமதியில்லை.

"விற்பனை செய்யப்படாத மனைகள் : 16" (7,9 முதல் 15முடிய,19,23 முதல் 29 முடிய மனைகள் மட்டும்)

மேற்குறிப்பிட நிபந்தனைகளை மீறினால் மனைப்பிரிவு அங்கீகாரத்தை இரத்து செய்திட ஏதுவாகும் எனவும் விற்பனை செய்யப்பட்ட வீட்டுமனைப் பிரிவிற்கு உரிய நபர்கள் தனித்தனியே விண்ணப்பிக்கும் பட்சத்தில் இறுதி வரன்மறை அங்கீகாரம் வழங்கப்படும் எனவும் மனுதாரருக்குத் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : "அ", "ஆ"

பட்டியல்கள்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ.),
அந்தியூர் வட்டாரம்.

பெறுதல் :

திரு.எஸ்.சேகர்
த/பெ சித்தன்,
எம்.ஜி.ஆர்.நகர்,
ஆவாரங்காடு, பள்ளிபாளையம்,
திருச்செங்கோடு வட்டம்,
நாமக்கல் மாவட்டம்.

நகல் :

1. நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம்,
   6, சன்னதி தெரு, சுப்பிரமணிய நகர்,
   சூரமங்கலம், சேலம் - 636 005.
2. சார் பதிவாளர், சார் பதிவாளர்அலுவலகம், அந்தியூர்.
3. ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), ஈரோடு அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
4. உதவி இயக்குநர் (நில அளவை), ஈரோடு அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
5. தலைவர், சின்னத்தம்பிபாளையம் ஊராட்சி, அந்தியூர் வட்டாரம்.
6. உபரி - 2.